# தமிழ்நாடு அரசு

## சுருக்கம்


பணியமைப்பு - சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் - சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய பணியாளர்களுக்கு ஓய்வூதியத் தொகை வழங்குவதற்கான ஓய்வூதிய நிதி உருவாக்க அனுமதி வழங்கி ஆணையிடப்படுகிறது.


---

### நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரு 1) துறை

அரசாணை (நிலை) எண் 63 நாள் 23.4.98.

படிக்கப்பட்டது

நிர்வாக இயக்குநர், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு

நீரகற்று வாரியம் கடித எண் நிதி / பி ு ஜி/28663 /97 நாள் 22.12.97.

******

<u>ஆணை</u>

பார்வையில் உள்ள நிர்வாக இயக்குநர், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் செயற்குறிப்பினை ஏற்று, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய பணியாளர்களுக்கு ஓய்வூதிய தொகை வழங்குவதற்கான ஓய்வூதிய நிதி உருவாக்க கீழ்க்காணும் நிபந்தனைக்குட்பட்டு அரசு ஒப்புதலளிக்கிறது.

1. வாரியத்தின் ஓய்வூதிய நிதியளவை கணக்கிடுவதற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகம் /காப்பீட்டுக் கணக்கு நிபுணர்கள் சங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்கு நிபுணர்களை கலந்தாலோசித்து ஓய்வூதிய நிதியை உருவாக்கலாம்.

2. இந்த மதிப்பீட்டின் அடிப்படையில் தேவைப்படும் ஒதுக்கீட்டை 1998 - 99 ஆம் ஆண்டிலிருந்து ஏற்படுத்திக் கொள்ளலாம்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு.மாலதி

அரசு செயலாளர்

பெறுநர்

நிர்வாக இயக்குநர், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், சென்னை 2
நகல் நிதி (பிபிஇ)துறை, சென்னை 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பொது 1) துறை, சென்னை 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மெட்ரோ துறை, சென்னை 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்